முக்கிய வார்த்தைகள்:
*வித்தியாசம்*
*நடுநிலையான தன்மை*
*மரியாதை செய்வது*
*ஒற்றுமை*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**12 செப்டம்பர் 2025 / 19 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1447**

**வஸதிய்யாஹ்: நமது சமுதாயத்தின் சிறந்த பண்பாகும்**

**ٱلْحَمْدُ لِلَّهِ عَلَى إِحْسَانِهِ، وَٱلشُّكْرُ لَهُ عَلَى تَوْفِيقِهِ وَٱمْتِنَانِهِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ تَعْظِيمًا لِشَأْنِهِ، وَأَشْهَدُ أَنَّ نَبِيَّنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ ٱلدَّاعِيَ إِلَىٰ رِضْوَانِهِ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ وَإِخْوَانِهِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيْل: يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.**

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது "தக்வா" [பக்தியை] நம்மில் ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வுக்கு மனப்பூர்வமாக அடிபணிந்து நடப்பதற்கு நாம் செய்யும் முயற்சிகளுக்காக, அல்லாஹ் நமக்கு அவனது அழகிய சொர்க்கத்தை வெகுமதியாக வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் பிறந்த இந்த மாதத்தில், நமது அன்பையும் மரியாதையையும் பல வகையில் அவர்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்கிறோம். நம்மில் சிலர், தனிமையில் அமைதியாக இருந்து அவர்கள் மீதான அன்பை வெளிப்படுத்திக் கொள்கிறோமென்றால், மற்ற சிலர், மீலாது விழாக்களை கொண்டாடுவதன் மூலம் அவர்கள் மீதான அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்துகிறார்கள்.

நமது மார்க்க அறிஞர்களிடம் காணப்படும் வித்தியாசமானக் கருத்துக்கள் தான், சமுதாய மக்களிடம் காணப்படும் இந்த வித்தியாசங்களுக்குக் காரணமாகும். சில விஷயங்களில், நபித்தோழர்களாகிய ஸஹாபாக்கள் கூட கருத்துவேறுபாடு கொண்டிருந்தார்கள். எனினும், அவர்களின் கருத்துவேறுபாடுகள், அவர்களுக்கு மத்தியில் காணப்பட்ட ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் அன்பிற்குத் தடையாக இருக்கவில்லை.

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் தோழர்களாகிய ஸஹாபாக்கள் மற்றும் கடந்த கால அறிஞர்களிடம் காணப்பட்ட கருத்துவேறுபாடுகளானது, அவர்களுக்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தாமலிருந்ததற்கு, அவர்கள் பின்பற்றிய கொள்கை என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா?

இக்கேள்விக்கானப் பதிலை திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 143-வது வசனத்தில் காணலாம்:

وَكَذَٰلِكَ جَعَلْنَٰكُمْ أُمَّةً وَسَطًا

பொருள்: "இவ்வாறே, நாம் உங்களை ஒரு நடுநிலையான, நேரான சமுதாயமாக ஆக்கியுள்ளோம்"

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, இந்த சமுதாயத்தை *"உம்மதன் வஸதா"* அதாவது, நடுநிலையான, நீதமான சமுதாயம் எனக் கூறுகிறான். வணக்க வழிபாடுகள், சமூகத் தொடர்பு, பொருளாதாரம் மற்றும் மனித உறவுகள்

ஆகிய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நீதத்தையும் மதிநுட்பத்தையும் வெளிப்படுத்துகின்ற, தீவிரவாதத்தைத் தவிர்க்கின்ற சமுதாயம் எனவும் புகழ்ந்து கூறுகிறான்.

இம்மாதிரியான நடுநிலையான [வஸதிய்யாஹ்] கொள்கையைத் தான், வித்தியாசமான விளக்கங்களின் விஷயத்தில் கடந்த கால அறிஞர்கள் பின்பற்றி வந்தார்கள்.

**மரியாதைக்குரிய சகோதரர்களே!**
இந்த *வஸதிய்யா* எனும் கொள்கையை, நமது அன்றாட வாழ்க்கையில், குறிப்பாக, அறிஞர்களின் கருத்துவேறுபாடுகளை எதிர்கொள்ளும் போது மூன்று வகையில் நாம் செயல்படுத்தலாம்.

**முதலாவதாக, வித்தியாசமானக் கருத்துக்களைப் புரிந்து கொள்வதும் அவற்றை மதிப்பதும் அவசியமாகும்.**
*"இஜ்திஹாத்"* எனப்படும் அறிவார்ந்த சிந்தனை மற்றும் முயற்சிகளுக்கு இடமிருக்கும் காலமெல்லாம், வித்தியாசமானக் கருத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கும். வித்தியாசமானக் கருத்துகள் புதிய முற்போக்குச் சிந்தனைகளை நமக்கு அறிமுகம் செய்வதோடு, நமது ஓரிறை நம்பிக்கையை ஆழமாகப் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் நமக்கு வழங்குகின்றன. எனினும், இம்மாதிரியான விவாதங்களும் விளக்கங்களும் ஷரீஅத் அனுமதித்துள்ள எல்லைகளுக்குள் இருப்பது அவசியமாகும்.

உதாரணமாக, முஸ்லிம்களில் சிலர் மவ்லிதுர்ரசூல் அனுமதிக்கப் பட்டதல்ல எனக் கூறி, அதனைச் செயல்படுத்துவதில்லை; ஆனால் மற்ற சிலரோ, அதனை அனுமதிக்கப்பட்டதாகக் கருதுகிறார்கள். காரணம், அதில் ஸலவாத் ஓதுதல், திருக்குர்ஆனை ஓதுதல், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் சிந்தனை செய்தல் போன்ற நற்காரியங்கள் காணப்படுவதால் அது கூடும் எனக் கூறுகிறார்கள். எனினும், இரு சாராரின் கருத்துக்களும் சிந்தனையில் கொள்ளத்தக்கது என்பதால், அவை இரண்டும் மதிக்கப்படுவது அவசியமாகும்.

**இரண்டாவதாக: நமது கருத்துக்கள் நம்பத்தகுந்த அறிஞர்களின் வழிகாட்டுதல் மற்றும் கல்வியறிவை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.**

ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பாக அல்லது அதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு முன்பாக, அச்செயல்பாட்டை நாம் கவனமாக ஆய்வு செய்வதும், அதில் சிந்தனை செய்வதும் அவசியமாகும். எவர்களின் கல்வியறிவு மக்களிடம் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அந்த ”அஸாதிதா” அதாவது, அறிஞர்களின் வழிகாட்டுதலை நாட வேண்டும். இவ்விஷயத்தில் நமது முயற்சிகள், சரியான ஆதாரம், இஸ்லாமிய அறிஞர்களின் வழிமுறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அனுமானங்கள், நமது சொந்த கருத்துக்கள் மீதான வெறித்தனம், உணர்ச்சிகள், சமூக சம்பந்தமான ஆதிக்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது.

**மூன்றாவதாக: சட்டப்படியான அறிஞர்களின் கருத்துக்களைப் பெற்றிருக்கும் உரிமை மற்றவர்களுக்கு உள்ளது என்பதை ஏற்க வேண்டும்.**

ஒவ்வொரு தனிநபருக்கும், ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ள, அறிஞர்களால் வழிகாட்டப்பட்டுள்ள, நேர்மையான நோக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களைப் பின்பற்றும் உரிமை உள்ளது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டில் கலந்து கொள்ளலாம்; அல்லது அதிலிருந்து தவிர்ந்து, கலந்து கொள்ளாமலும் இருக்கலாம். சமுதாயத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கில் இரு செயல்களும் மதிக்கப்பட வேண்டும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் ”அல்-அன்ஃபால்” எனும் அத்தியாயத்தின் 46-வது வசனத்தில் கூறுகிறான்:

وَأَطِيعُوا۟ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَلَا تَنَٰزَعُوا۟ فَتَفْشَلُوا۟ وَتَذْهَبَ رِيحُكُمْ ۖ وَٱصْبِرُوٓا۟ ۚ إِنَّ ٱللَّهَ مَعَ ٱلصَّٰبِرِينَ ﴿٤٦﴾

பொருள்: மேலும், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் - கருத்துவேறுபாடு கொள்ளாதீர்கள்; [அவ்வாறு கருத்துவேறுபாடு கொண்டால்] கோழைகளாகி விடுவீர்கள்; உங்கள் பலம் குன்றி விடும்; [துன்பங்களைச் சகித்துக் கொண்டு] பொறுமையாக இருங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மீது அன்பு கொள்பவர்கள் எனும் ரீதியில், நமக்குள் கருத்துவேறுபாடுகள் ஏற்பட அனுமதிக்கக் கூடாது; அவர்கள் மீதான நமது அன்பு, நம்மை எப்படிப் பிரிக்கக் கூடியதாக இருக்கும்? இதற்கு மாறாக, நாம் "வஸதிய்யா" [நடுநிலை] எனும் கொள்கையைச் செயல்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்; அப்போது தான், நமக்குள் ஒற்றுமை, கருணைச் சிந்தனை, பரஸ்பரம் மரியாதை செய்து கொள்வது ஆகியவைத் தொடர்ந்து நீடிக்கும்.

எனவே, தொடர் விவாதங்களில் ஈடுபடாமல் நமக்குள் நாம் சிந்தனை செய்வது அவசியமாகும்.

இறைத்தூதர்[ஸல்] அவர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் நாம் என்ன செய்துள்ளோம்? அவர்கள் மீது "ஸலாவத்" சொல்வதை அதிகரித்துக் கொள்வதுடன், நமது சொல், செயல்கள், குணம் ஆகியவற்றில் அவர்களின் "சுன்னாஹ்" எனும் வழிமுறையை எந்தளவு நாம் செயல்படுத்தியுள்ளோம்? நமது இளைய தலைமுறையினரின் உள்ளங்களில் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மீதான அன்பு ஏற்படுவதற்கு எந்தளவு நாம் முயற்சி செய்துள்ளோம்? அவர்கள் மீதான அன்பு நமது வாழ்க்கையில் வழிகாட்டும் ஒளி விளக்காக அமைவதற்கு என்ன முயற்சி செய்துள்ளோம்? என்றெல்லாம் சிந்திப்பது அவசியமாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்கு மதிநுட்பத்தையும் விவேகத்தையும் உறுதியான கட்டமைப்பைப் போன்று ஒன்றுபட்டு ஒற்றுமையாக இருக்கும் ஆற்றலையும் வழங்குவனாக! அந்த கட்டமைப்பின் ஒரு பகுதி மற்ற பகுதியைப் பலப்படுத்தட்டுமாக! ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் மீது நாம் அன்பு கொள்வதானது, நமக்கு செழிப்பான நிலை ஏற்படுவதற்குக் காரணமாக அமையட்டுமாக! அவர்களுடைய போதனைகளின் பிரகாரம் உண்மையாக வாழும் மக்களாக நம்மை ஆக்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.